# திலகவதியின் உனக்காகவா நான் நாவலில் பெண்

***கு. ஜெயலட்சுமி***
முனைவர் பட்ட ஆய்வாளர்
ஏ.பி.சி மகாலட்சுமி மகளிர் கல்லூரி
மனோன்மணியம் சுந்தரனார்பல்கலைக்கழகம், திருநெல்வேலி

***நெறியாளர் சு. விஜயாகலைவாணி***
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஏ.பி.சி மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6450

***ஆய்வுச் சுருக்கம்***

*“**மங்கையராகப் பிறப்பதற்கே-நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா**” என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை கூறுகிறார். அத்தகைய பெருமையினையுடைய மகளிர் சிலகாலம் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்தனர். ஆனால் பின் மாதரை இழிவுபடுத்தும் நிலை ஏற்பட்டது. பெண்ணியம் பெண்களின் உரிமைகளைப் பற்றி பேசி, பெண் தன் வாழ்வில் முன்னேறுவதற்கான வழிமுறைகளைக் கூறுவது ஆகும். பெண்கள் தம் வாழ்வினில் எவ்விதமான அடக்குமுறைகளுமின்றி சுதந்திரமாக வாழ வழி செய்வதே பெண்ணியத்தின் நோக்கம் ஆகும். பிரகதி கல்வியறிவு பெற்ற பெண்ணாக இருப்பினும் அவள் பல இழிவுகளைச் சந்திக்கிறாள். பிரகதியின் திருமணத்தினை மொட்டைக் கடிதத்தின் மூலமாக நிறுத்தியவன் மூர்த்தி என்பதைக் கண்டுபிடித்த பிரகதி நீதிமன்றம் செல்லலாம் என தன் தந்தையிடம் கூற குடும்பப் பிரச்சனைகளுக்காக நீதிமன்றம் சென்றால் அதனால் தேவையில்லாத பணவிரயமும் அவமானமுமே ஏற்படும் என்கிறார் தந்தை நாதமுனிகள். கல்லூரியில் விரிரிவுரையாளராகப் பணியாற்றிய பிரகதி கணவன் தருணுக்காக கல்லூரியை விட்டு மெக்கானிக் ்ரப்பிற்கே லந்து வேலைகளையும் கற்றுக்கொண்டு இன்னும் பல பெண்களுக்கு அதனைக் கற்பித்து பெரிய அளவில் மெக்கானிக் துறையில் மாற்றங்களை ஏற்படுத்தி குடும்ப வாழ்விலும் தொழில்துறையிலும் வெற்றி வாய்ப்பினைப் பெற்றாள்.் பெண் கல்வியிலும் வேலையிலும் மற்றும் குடும்பத்திலும் அடையக் கூடிய இன்னல்களையும் அதனைத் தாங்கி அவள் பெறும் வெற்றியையும் வெளிப்படுத்துவதாகவே திலகவதியின் உனக்காகவா நான் நாவல் அமைகிறது.*

## முன்னுரை

நாளும் பொழுதும் குறைவேதுமில்லாமல் நிறைவாகப் பெருகி வரும் மக்களின் வாழ்வியல் சிக்கல்களைக் கருவாகக் கொண்டு படைக்கப்படுபவையே இலக்கியங்கள். அத்தகைய இலக்கியங்களில் மக்களின் வாழ்வியலில் குறைகளைக் களைந்து மாற்றங்களை ஏற்படுத்தும் விதத்தில் உருவாக்கப்படுபவையே நாவல்கள்.

அவ்வாறான நாவல் இலக்கியத்தில் சமூகப் பண்பாட்டுத் தளங்களில் பெண்களின் நிலை பற்றி அறியவும், அவர்களின் மீதான வன்முறையை உணர்ந்து கொள்ளவும் உதவுவது பெண்ணியம். அவ்வகையில் பெண் படைப்பாளரான திலகவதியின் "உனக்காகவா நான்" நாவலில் பெண்ணின் நிலை குறித்து அறிவதாக இக்கட்டுரை அமைகிறது.

### பெண்ணியம்

பெண்ணியம் என்பது ஆண்களை எதிர்ப்பது அல்ல. ஆணாதிக்கத்தை எதிர்ப்பதே பெண்ணியம் ஆகும். இது பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்து கொண்டு அவற்றைக் களைய முற்படும் இயக்கமாகும். இந்த ஆணாதிக்க சமுதாயத்தில் பெண்ணினம் தன்னை முதன்மைபடுத்திக் கொள்வதற்காகப் பலவித போராட்டங்களை நடத்தி வருகிறது. ஆங்கிலத்தில் **'Feminism'** என்று வழங்கப்படும் கலைச்சொல்லே தமிழில் பெண்ணியம் என்று வழங்கப்படுகிறது. **'Femina'** என்ற பெண்ணைக் குறிக்கும் இலத்தீன் சொல்லிலிருந்து தோன்றியது பெண் என்னும் சொல் ஆகும்

### பெண்ணியம் - அறிஞர் கருத்து

> **"பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து அதனை மாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் பெண்ணியம்"**

என்று கார்டன் கூறுவதாக பெண்ணியம் அணுகுமுறைகளும் இலக்கியப் பயன்பாடும் என்னும் நூல் கூறுகிறது. புட்சர் என்பவர்,

> **"பெண்ணியம் என்பது பெண்கள் பாகுபாட்டால் அனுபவிக்கும் தனிப்பட்ட பொருளாதாரத் துன்பங்களை எதிர்த்து மேற்கொள்ளும் இயக்கம்"**

என்று கூறுவதாக சு.முத்துச்சிதம்பரம் தனது பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும் நூலில் (ப.11) கூறுகிறார்.

### பெண்ணின் இயல்பு

பெண்ணின் இயல்பு குறித்துக் கூறும்போது தொல்காப்பியர்,

> **அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப -**
>
> ***(தொல். களவியல்.96)***

> **"பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும் திண்மை உண்டாகப் பெறின் "**
>
> ***(குறள் -54)***

என்று வள்ளுவரும் நல்ல பண்பு நலன்கள் மற்றும் கற்பு இவையே பெண்ணிற்கு தேவை என்று இலக்கியங்கள் பெண்களுக்கு ஒரு நியதியை வகுத்து வருவதை அறிய முடிகிறது.

### உனக்காகவா நான் நாவலில் பெண்

ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்கின்ற குடும்பத்தில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமாயின் இருவரின் செயல்பாடுகளுமே துணைபுரியும். ஆனால் இதை அறியாத ஆண் சமூகத்தினர் குடும்ப நிலையிலும் சமுதாய நிலையிலும் அனைத்திலும் தாமே முதன்மையானவர் எனக் கருதி பெண்களை இரண்டாந்தர நிலைக்குத் தள்ளி அவர்களை உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் ஒடுக்ககின்றனர்.

இத்தகைய சூழலில் உள்ள பெண் கல்வியிலும் வேலையிலும் மற்றும் குடும்பத்திலும் அடையக்கூடிய இன்னல்களையும் அதனைத் தாங்கி அவள் பெறும் வெற்றியையும் வெளிப்படுத்துவதாகவே திலகவதியின் உனக்காகவா நான் நாவல் அமைகிறது.

### கல்வி ஆணுக்கே என்னும் ஆணவம்

உனக்காகவா நான் நாவலில் முதன்மைப் பாத்திரமான பிரகதி தன் கல்லூரித் தோழன் மோகன்ராமை நூலகத்தில் சந்திக்கிறாள். அப்போது அவன் அறிவில் சிறந்தவர் ஆண்களே என்றும் அவர்களே கற்ற கல்வியின் வழி வாழக் கூடியவர் என்றும் கூறுகிறான். மேலும் பெண்கள் இளமையில் எவ்வளவு படித்தாலும் இறுதியில் எதுவும் அவர்களுக்குப் பயன்தராது என்றும் ஆணவமாகப் பேசுகிறான்.

**"பாவம் நீ என்ன செய்வே? பொம்பளை இந்நேரம் உனக்கு வீட்ல மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிச்சிருப்பாங்க. கல்யாணம் பண்ணிக்கிட்டு குழந்தை பெத்துக்கிட்டு, அப்பப்போ கருத்தடை மாத்திரை சாப்பிட்டுக்கிட்டு இருக்கிறதுக்கே உனக்கு நேரம் சரியா இருக்கும். அதுக்கப்புறம் படிக்க எங்க நேரம் கிடைக்கும். பக்கத்து வீட்டுப் பொண்ணுங்களோட அரட்டை இல்லைன்னா இருக்கவே இருக்கு டி.வி சீரியல் இப்படியே பொழுது கழிஞ்சிடும்"**

**- (உனக்காகவே நான்-பக்.28 )**

என்று மோகன்ராம் பெண்களின் நிலை பற்றி கூறுவதாக ஆசிரியர் கூறுகிறார்.

### மொட்டைக் கடிதத்தின் தாக்கம்

பிரகதிக்கும் தனபாலுக்கும் நிச்சயம் செய்யப்பட்டு உற்றார் உறவினர் சூழ திருமணம் நடைபெறும் வேளையில் பிரகதியை ஒரு தலையாகக் காதலித்த தமிழாசிரியர் மூர்த்தி ஒரு மொட்டைக் கடிதத்தை தனபாலுக்கு எழுதி அதனைக் கண்ட தனபால் திருமணத்தை நிறுத்திவிடுகிறான்.

**"என்ன மாப்பிள்ளே ரொம்ப உற்சாகத்துல இருப்பீங்க விடிஞ்சா கல்யாணம் இல்லியா? ஒண்ண மட்டும் சொல்றேன். நீங்க பிரகதியைக் கலியாணம் பண்ணிக்கிட்டீங்கன்னா உங்க வாழ்க்கை எப்பவுமே விடியாது. ஏன்னா பிரகதி மேல அழுக்கு இருக்கு"**

**- (உனக்காகவே நான்-பக். 67)**

இவ்வாறு எந்தவொரு குறையுமின்றி இருக்கும் பெண்ணை இழிவபடுத்தக்கூடிய நிலையை நாவல்வழி காணமுடிகிறது.

### குடும்ப மானம் காக்கும் நிலை

திருமணத்தினை மொட்டைக் கடிதத்தின் மூலமாக நிறுத்தியவன் மூர்த்தி என்பதைக் கண்டுபிடித்த பிரகதி தன் தந்தையிடம்,

**"பாருங்க மிரள வைக்கிறேன். கோர்ட்டுக்கு இழுத்து மானநசுட வழக்கு போட்டுக் கதற வைக்கிறேன். வக்கீல்கிட்ட போறேன்"**

**-(உனக்காகவே நான்-பக். 82 )**

என்றவுடன் அதற்கு அவளுடைய தந்தை,

**"ஐயோ வேணா குக்கி. இவ்வளவு பொல்லாதவன்கிட்டே மோத வேணா குக்கி.அப்புறம் கோர்ட் அது இதுன்னு போனா நமக்கும் அலைச்சல் .விசுயமும் சீக்கிரமா முடிவுக்கு வராது"**

**- (உனக்காகவே நான்-பக். 82 )**

குடும்பப்பிரச்சனைகளுக்காகநீதிமன்றம் சென்றால் அதனால் தேவையில்லாத பணவிரயமும் அவமானமுமே ஏற்படும் என்று நாதமனிகள் குறிப்பிடுவது சமுதாயத்தைக் கண்முன் காட்டுவதாக உள்ளது.

### கல்வி அழகே அழகு

பிரகதியின் தாய் கங்கா தன் மகள் மற்ற பெண்களைப் போல் அலங்காரம் செய்துகொண்டு, பார்க்கும் பொழுது ஆண்களுக்கு அழகாகத் தெரிய வேண்டும் அப்படியானால் மட்டுமே ஆண்கள் விரும்பித் திருமணம் புரிவர் என்று பிரகதியிடம் கூறும்போது,

"தோலின் நிறத்தாலும் தோற்றத்தின் கவர்ச்சியாலும் அவர்களைப் பார்க்க வைக்கின்ற பெண்கள் இருக்கிறார்கள். நான் என் அறிவால் திறமையால் உழைப்பால் உலகத்தை என்னைத் திரும்பிப் பார்க்க வைப்பேன்.காலம் அவர்களின் அழகை அரித்துக் குலைக்கும்.மாறாக, அதே காலம் என் புகழைப் பெருக்கி அசாதாரணமானவர்களின் வரிசையில் என்னை நிறுத்தும்படி செய்வேன்.என் அறிவினாலும் உழைப்பினாலும் நாடும் உலகமும் பயனடையும்"

*- (உனக்காகவே நான்-பக். 10 )*

என்று கல்வியினால் பெறக்கூடிய அழகே என்றும் நிலைத்திருக்கும் மற்றவை மதிப்பின்றி மண்ணரித்துப் போய்விடும் என்று பெண்களுக்குக் கல்வி அழகே சிறப்ப என்று திலகவதி கூறுகிறார்.

### வாழ்க்கைத்துணை

கங்கா பிரகதியிடம் பெண்ணுக்கு வாழ்க்கைத் துணையென ஆண்மகன் ஒருவன் கண்டிப்பாகத் தேவை.அதனால் கண்டிப்பாகத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று கூறும்போது,

**"துணைன்னா என்ன? வெளிய போறப்ப ஒரு பெண்ணுக்கு பாடிகாட் மாதிரி கூட வர்றதா இல்ல தெனமும் ராத்திரி பக்கத்தல படுத்துக்க ஒரு ஆம்பளை வேணுங்கிறதா? எது துணை?.... இனப்பெருக்கத்திற்கும் உடல் சுகத்திற்கும் ஆசைப்பட்டு பண்ணிக்கிறதுக்குப் பேரு தான் கல்யாணமா? அது எனக்கு எதுக்கு?"**

**- (உனக்காகவே நான்-பக். 85 )**

என்று ஆசிரியர் திலகவதி பல கேள்விகளை பிரகதி மூலமாக முன்வைக்கிறார்.

## எங்கும் எதிலும் பெண்

கல்லூாயில் விரிவுரையாளராகப் பணியாற்றிய பிரகதி தனது காதல் கணவன் தருணுக்காக கல்லூரியை விட்டு அவன் பணிபுரிந்த மெக்கானிக் 'ாப்பிற்கே வந்தாள். அங்குள்ள அனைத்த வேலைகளையும் கற்றுக்கொண்டு இன்னும் பல பெண்களுக்கு அதனைக் கற்பித்து பெரிய அளவில் மெக்கானிக் துறையில் மாற்றங்களை ஏற்படுத்தி குடும்ப வாழ்விலும் தொழில்துறையிலும் வெற்றி வாய்ப்பினைப் பெற்றாள்.

## முடிவுரை

இந்நவீன யுகத்தில் பெண்கள் கல்வியறிவு பெற்றாலும் வாழ்வில் எவ்வளவு பிரச்சனைகளைத் தாண்டி வருகின்றனர் என்பதையும் ஆண்களின் ஆணாதிக்க பண்பினையும் குடும்பச் சூழலில் வாழும் பெண் தன்னால் முடிந்த செயல்களைச் செய்து தம்குடும்ப வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதையும் எல்லாத் துறைகளிலும் பெண்களால் வெற்றி பெற முடியும் என்பதையும் மிகவும் சிறப்பாக உனக்காகவே நான் நாவலில் எழுத்தாளர் திலகவதி அவர்கள் எடுத்துரைக்கிறார்.

## துணைநூற் பட்டியல்


1. திலகவதி - உனக்காகவா நான் அம்ருதாபப்ளிகேசுன்ஸ், சென்னை -116 முதல்பதிப்பு - 2007
2. தமிழ் வேட்பன்- திருக்குறள் ஸ்ரீ ஙெண்பகாபதிப்பகம், தேனாம்பேட்டை, சென்னை. முதற்பதிப்பு - அக். 1995.
3. முத்துச்சிதம்பரம்.ச - பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும் தமிழ்ப் புத்தகாலயம், தி.நகர், சென்னை. முதற்பதிப்பு - 2007.